மெட்ரோ ரயில் நிலையங்களில்

# சிசிடிவியில் கண்காணித்து மாஸ்க் அணியாதவர்களுக்கு அபராதம் விதிப்பு

சென்னை, ஏப். 12: மாஸ்க் அணியாத பயணிகள் குறித்து மெட்ரோ ரயில் நிலையங்களில் தீவிர கண்காணிப்பு செய்யப்பட்டது. முகக்கவசம் அணியாமல் வந்த நபர்களை விரட்டி விரட்டி அபராதம் வசூலிக்கப்பட்டது.

கொரோனா பரவலை தடுக்க பொதுமக்கள் நிலையங்களுக்குள்ளோ, மெட்ரோ ரயிலிலோ முகக்கவசம், தனிமனித இடைவெளி ஆகியவற்றை பின்பற்றாவிட்டால் ரூ.200 அபராதம் விதிக்கப்படும் என கடந்த 8ம் தேதி மெட்ரோ ரயில் நிர்வாகம் எச்சரித்திருந்தது. இந்த நடைமுறை கடந்த 10ம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டது. இந்தநிலையில், நேற்று முகக்கவசம் அணியாத நபர்களை கண்டறிய அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் 10 குழுக்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். மெட்ரோ ரயில் நிலையங்களுக்குள் முகக்கவசம் அணியாத நபர்களை உள்ளே அனுமதிக்கவில்லை. இதேபோல், நிலையங்களுக்குள்ளும், மெட்ரோ ரயில் பெட்டிகளிலும் முகக்கவசம் பயணிகள் அணிந்துள்ளார்களா என்பதை கேமரா மூலம் தீவிரமாக கண்காணித்தனர். கட்டுப்பாட்டை மீறி முகக்கவசம் அணியாத நபர்களிடம் அப்ராதம் வசூலித்தனர்.